Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 7·3·1985 வியாழக்கிழமை (மாசி 24—ஜ. ஆகிர் 14) முழக்கம் 31

## துர்க்கை அம்மன் ஆலய திருட்டில் சம்பந்தப்பட்ட மூவர் கைது?

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் திருட்டுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் மூவர் கைதாகியுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இளைஞர் இயக்கமொன்றினால் சந்தேக நபர்கள் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருவதாகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் சரியான ஆதாரம் காட்டித் தெரிவித்தன. இதற்கிடையே நேற்றும் பெரும் தொகையான பக்தர்கள் துர்க்கை அம்மன் கோவிலுக்குச் சென்று அங்கு நடைபெற்ற அனர்த்தங்களை நேரில் பார்வையிட்டுச் சென்றதாகவும், அனைவருமே கவலை தோய்ந்தவர்களாகக் காணப்பட்டதாகவும் எமது நிருபர் அறிவித்துள்ளார்.

# குருநகர் முகாமுக்கு அருகிலுள்ள 29 வீடுகளில் வசிப்பவர்களை அங்கிருந்து வெளியேற உத்தரவு

குருநகர் இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள 29 வீடுகளில் குடியிருப்பவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு கடைசி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முகாமுக்கு அண்மையிலுள்ள 86 வீடுகளில் நீண்டகாலமாக வசித்து வரும் சுமார் ஐநூறுக்கும் அதிகமானவர்களை பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டபோதிலும், 29 வீடுகளில் குடியிருப்பவர்களையே உடனடியாக வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றி யாழ். பிரஜைகள் குழுவின் தூதுக்குழுவொன்று நேற்று குருநகர் இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் வனசிங்கவைச் சந்தித்து உரையாடியது குருநகர் குடியிருப்பாளர்களுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதிகள் வழங்கவேண்டியதன் அவசியத்தை இவர்கள் வலியுறுத்தினர், அனேகமாக பண்ணையிலுள்ள வீடுகளுக்கு 29 குடும்பங்களும் அனுப்பப்படலாமெனத்தெரிய வந்துள்ளது. யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர், யாழ். மாவட்ட அமைச்சின் இணைப்புச் செயலர் திரு. எஸ் பி பாலசிங்கம் ஆகியோரும் இச் சந்திப்பில் பங்குபற்றினர். பிரஜைகள் குழுவின் சார்பில் அறுவர் கலந்து கொண்டனர்.

# வடமராட்சியில் திடீர் முற்றுகை! 10 பேர் பலி; பலர் கைது!

## ஆயுதங்களும் மீட்கப்பட்டன

### பல கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டதால் வாகனங்களும் குண்டுகளும் மீட்கப்பட்டதாம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியை நேற்று அதிகாலை திடீர் முற்றுகையிட்டு, இங்குள்ள பல கிராமங்களையும் சுற்றி வளைத்துச் சுமார் பதினெட்டு மணித்தியாலங்களுக்கு மேலாக பாதுகாப்புப்படையினர் நடத்திய தீவிர சோதனையின் போது பத்துப் பேர் கொலையுண்டதாகவும், பன்னிரண்டு பேர் கைதானதாகவும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இச்சோதனை நடவடிக்கைகளின் போது பெரும் தொகையான ஆயுதங்கள், வெடிமருந்துகள், குண்டுகள் ஆகியனவும் மீட்கப்பட்டதாகவும், பல வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கரவெட்டி, நெல்லியடி, வதிரி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளே நேற்று அதிகாலை முதல் பாதுகாப்புப் படையினரால் முற்றுகையிடப்பட்டு சோதனையிடப்பட்ட பகுதிகளாகும் இதனால் நேற்று முழுவதும் இப்பகுதி மக்கள் எவரும் வெளியே வர முடியாமலும், வெளியிட மக்கள் உள்ளே செல்ல முடியாமலும் தடுக்கப்பட்ட நிலை உருவாகியிருந்தது.

இப்பகுதிகளுக்கு ஊடான போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பித்தன, இங்குள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்களும் மூடப்பட்டன,

வடமராட்சிப் பகுதியின் அதிகமான இடங்களில் வீடு வீடாகச் சோதனை நடைபெற்றதாகவும், தீவிரவாத இளை

—4-ஆம் பக்கம் பார்க்க

## ஆந்திரா, கர்நாடக தவிர

# இந்தியா முழுவதும் இந்திரா காங்கிரஸ்

(புதுடில்லி)

நேற்றிரவு அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளின் படி ஆந்திர, கர்நாடகம் தவிர்ந்த மற்றைய சகல மாநிலங்களையும் இந்திரா காங்கிரஸே கைப்பற்றி வருகின்றது.

மத்திய பிரதேசத்தின் 320 தொகுதிகளில் இ. காங்கிரஸ் 250 ஐப் பெற்றுள்ளது.

குஜராத்தில் முடிவு வெளியான 130 தொகுதிகளில் இ. காங்கிரஸ் 113 ஆசனங்களை பெற்றுள்ளது.

ஹிமாலய, ராஜஸ்தான், பீஹார், உத்தரப்பிரதேசம் ஆகிய அனைத்திலுமே இ. காங்கிரஸே அதிகப் பெரும்பான்மையைப் பெற்று முன்னணியில் திகழுகின்றது.

—4-ஆம் பக்கம் பார்க்க

## திருப்பத்தூர் இ. காங்கிரஸ்

திருப்பத்தூர் சட்டசபைக்கான இடைத் தேர்தலில் இ. காங்கிரஸ் வேட்பாளர் மணவாளர் வெற்றிபெற்றுள்ளார். தி.மு.க. வேட்பாளரிலும்பார்க்க14630 அதிகப்படி வாக்குகள் இவருக்குக் கிடைத்தது.

## அகதிகளுக்கு மதுரையில் இரு வீடமைப்புத் திட்டம்

(சென்னை)

இலங்கையிலிருந்து மதுரை மாவட்டத்திற்குச் சென்றுள்ள அகதிகளைக் குடியேற்றுவதற்கு அறுநூறு வீடுகளைக் கொண்ட இரண்டு முகாம்கள் எண்பது இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நேற்று அறிவித்தார்.

இவை ஒவ்வொன்றும்நான்கு

—4 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் அல்விஸ் அறிவிப்பு:

# ‘தொண்டா’வின் பாரதவிஜயம் தனிப்பட்டது; ஜனாதிபதியின் பிரதிநிதியாக செல்லவில்லை!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமிய கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமானின் இந்திய விஜயம் முற்றிலும் தனிப்பட்டது என்றும், அரசாங்கத்தினதோ ஜனாதிபதியினதோ பிரதிநிதியாக அவர் அங்கு செல்லவில்லை எனறும் ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்ட முடிவில் பத்திரிகையாளர் மத்தியில் இதனைத் தெரி

- 4ஆம் பக்கம் பார்க்க

## மாவட்ட சபைத் தேர்தல்கள் ஒரு வருடம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருந்த மாவட்ட சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதென்று நேற்றைய மந்திரி சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1981ம் ஆண்டில் முதலாவது தேர்தல் நடைபெற்றது. அடுத்த தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திவைப்பதென்று

—4 ஆம் பக்கம் பார்க்க

## பளையில் கொள்ளை

பளை பெரும் தெருக்கள் திணைக்கள அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரவு லொறியில் வந்த சுமார் இருபத்தைந்து பேரால் அங்கிருந்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டதாக யாழ்.

—4-ஆம் பக்கம்பார்க்க

## இ. காங்கிரஸ், அ.தி.மு.க. கைப்பற்றிய

# பாண்டிச்சேரியில் வெற்றி பெற்றவர்களின் விபரம்

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அனைத்திந்திய அ. தி மு.க -இந்திரா காங்கிரஸ் கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மை இடங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது. முப்பது ஆசனங்களைக் கொண்ட பாண்டிச்சேரி சட்டசபையில் 29 முடிவுகள் வெளியாகின: இதில் இந்திராகாங்கிரஸ் — அண்ணா தி மு. க கூட்டணி 21 ஆசனங்களையும், தி. மு. க. 5 ஆசனங்களையும், ஜனதா 2 ஆசனங்களையும் பெற்றிருக்கின்றன.

வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:-

-4ம் பக்கம் பார்க்க

## ராமராவ் 3 தொகுதியிலும் பெருவெற்றி

ஆந்திர பிரதேஷ் முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தான் போட்டியிட்ட

-4ம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்டத்தில் வசிக்கும்

# தொழிலில்லாத இளைஞர் யுவதிகள் வேலை வங்கியில் பதிவு செய்யலாம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1982ம் ஆண்டுக்குப்பின் ஜீ. சி. ஈ. சாதாரண தரம், உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்து இன்னும் வேலையின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளின் பெயர்களை ‘தொழில் வங்கி’யில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ் அரசாங்க செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள பதின்மூன்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட விருப்பதாக

— 4 ஆம் பக்கம் பார்க்க

# இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களின் விபரம்

நேற்றைய தொடர்

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள 841 ஆசிரியர்களில் 206 பேரின் பெயர் விபரம் கடந்த இரு தினங்களாக ஈழமுரசில் வெளியானது.

மிகுதிப் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

ஐ. வரதராஜா (திருமலை) ரீ கதிரவேலு (வவுனியா) திருமதி ஏ சிவசகாயவேல் (பதுளை) திருமதி பீ வாமதேவன் (மாங்குளம்) திருமதி பீ. சோமசுந்தரம் (தெகிவளை) என். கனகசிங்கம் (கண்டி) திருமதி பி முத்துக்குமாரசாமி (திருமலை) திருமதி ஆர் நாகராஜா (கொழும்பு) பீ. பஞ்சாட்சரம் (பரந்தன்) செல்வி சந்திரா வரதராஜா (கண்டி) என். தாமோதரம் (முல்லைத்தீவு) செல்வி வீ குலநாயகம் (கிண்ணியா) செல்வி எஸ். சண்முகநாதன் (திருமலை) செல்வி புஷ்பராணி பாலசிங்கம் (மன்னார்) திருமதி எஸ். தங்கரட்ணவேல் (கொழும்பு) என். ஜெயசீலன் (அம்பலாங்பிட்டி) செல்வி பீ. ஐயனகாரநாதன் (கொழும்பு) கே. சிறீவேல்நாதன் (பளை) திருமதி ரீ கணேசலிங்கம் (வவுனியா) திருமதி மேரி சிவராஜா (ஓமந்தை) மொகமது மீராப்பிள்ளை பெலிப் (வவுனியா) செல்வி எஸ். பொன்னையா (மன்னார்) கே. விக்கினேஸ்வரன் (முருங்கன்) திருமதி எஸ் ஆராமச்சந்திரன் (கலகெடிஹென) செல்வி என். சபாரட்ணம் (வத்தளை) பீ. நாகரட்னம் (வவுனியா) திருமதி சீ. அரியரட்ணம் (வவுனியா) திருமதி பீ தேவசகாயம் (பதவிதாட்ட) எஸ். மகாலிங்கதுரை (பதுளை) என். தங்கத்துரை (பதுளை) ரீ. தாமோதரம்பிள்ளை (பண்டாரவளை) ரீ. புண்ணியமூர்த்தி (பண்டாரவளை) பீ நவரட்ணம் (ஹாலி-எல) கே. குணநாயகம் (அக்கரப்பத்தனை) திருமதி கே. இரத்தினசபாபதி (மஸ்கெலிய) ஏ. குகபாலசிங்கம் (நுவரெலியா) என். தங்கராஜா (லிந்துல) ரீ நாகராஜா (மஸ்கேலிய) திருமதி எஸ். சந்தசாமி (தலவாக்கொல்லை) என். தியாகராஜா (மத்துகம) எஸ். ஜெயசுந்தரம் (புப்புரஸ்ஸ) ஆர். செல்லப்பா (கண்டி) கே. சுந்தரமூர்த்தி (கண்டி) ஏ. சதாசிவம் (பஸ்கெலிய) கே. தாபலிங்கம் (மஹவத்த) திருமதி என். இராஜரட்ணம் (பெறகாஸ்) கே வலநாதன் (மகிழ்மூர்) ஈ. நவரட்ணம் (பளை) எஸ். மாதவக்குமாரன் (உருத்திரபுரம்) ஆர். மஞ்சுகரன் (கண்டி) எஸ் டியூக் பற்குணன் லால் (புஸ்ஸலாவ) எஸ் சங்கரப்பிள்ளை (டம்புலை) செல்வி ஆர். சரவணமுத்து (முள்ளியவளை) திருமதி. எஸ். தர்மராசா (பூட்டுகட்டால) வீ. செல்வராஜா (முல்லைத்தீவு) கே உபேந்திரன் (குமுளமுனை) எஸ் யோகேஸ்வரன் (வவுனியா) செல்வி வீ. நடராஜா (பண்டாரிக்குளம்) சீ. சுப்பரமணியம் (வவுனியா) கே சந்திரசேகரம் (திரியாய்) திருமதி ஜெய்ரீ. அரியரத்தினா (கிண்ணியா) எம். விஸ்வநாதர் (நாவலப்பிட்டிய) எஸ் சிவபாதவிருத்தையர் (தெமட்டுகொட) ரீ நடராசா (மண்டன்டாவல) எஸ். சிறீஸ்கந்தராஜா (வெல்லவமது பத்த) வீ பத்மநாதன் (தபோலுவில) செல்வி ரீ கணபதிப்பிள்ளை (பதுளை) திருமதி. ஏ. என். பழனியலர்நாதன் (பண்டாரவளை) திருமதி எஸ். பரஞ்சோதி (தலவாகலை) செல்வி ஐ ஆம்பாக்கியம் (பொலன்றுவ) திருமதி எம். சீ. சுப்பிரமணியம் (வவுனியா) செல்வி எஸ் சின்னத்துரை (கொழும்பு) என். லோகேஸ்வரன் (வவுனியா) ஏ. சீ தமீம் (இலுப்பைக்குளம்) கே. மஞ்சுரஞ்சன் (மாங்குளம்)

றபாயஸ் அல்போன்ஸஸ், (வத்தளை) திருமதி ரீ. லிங்கேஸ்வரன் பநாதன் (வந்தாறுமூலை) எஸ். தாயலிங்கம் (கலகெஹடிஹென) திருமதி. பி. குணசிங்கராசா (எருக்கலம்பிட்டி) வீ. துரைரட்ணம் (ஹட்டன்) எஸ். கந்தசாமி (மட்டக்களப்பு) திருமதி பீ. பாலசுப்பிரமணியம் (புத்தளம்) திருமதி வீ. ராமேஸ்வரன் (புத்தளம்) கே. பநிருபசிங்கம் (புத்தளம்) பீ. வேணுகோபலவாணிதாசன் (நீர்கொழும்பு) திருமதி எஸ். சரவணமுத்து (உடப்பு) ஏ. தாமலிங்கம் (கல்முனை) என். சோமசுந்தரம் (நீர்கொழும்பு) செல்வி எஸ். பொன்னையா (மன்னார்) திருமதி எஸ். தயானந்தா (வவுனியா) சகோதரி மேரி கலிஸ்ரு (மட்டக்களப்பு) எஸ். ராசநாயகம் (முல்லைத்தீவு) கே. கதிர்காமசபந்தர் (அவிசாவளை) எம். அப்பா சாமிசர்மா (நாவலப்பிட்டி) செல்வி கரஸ்வதி சரவணமுத்து (கண்டி)

## வரி விளம்பரம்

பரந்தன் சந்தியில் இரண்டு (2) கடை கட்டக் கூடிய இடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ஆ. சிவஞானசுந்தரம் மே/பா ஆறுமுகம் அன் சன்ஸ் பரந்தன் சந்தி பரந்தன்.

விற்பனைக்கு

முட்டையிடும், இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு.
சி. கந்தசாமி, அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு.

கலர் பிலிம் கழுவுதல்
PROCESSING PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ரூடியோ

## கேணி புனரமைப்பு

(வேலணை)

வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரையின் அருகில் பொது மக்கள் நீராடுவதற்கும், வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் கோவில் விசேட திருவிழாக் காலங்களில் தீர்த்தம் ஆடுவதற்குமான கேணியொன்றை அமைப்பதற்கு வேலணை இந்து வளர்ச்சிக் கழகமும், வேலணை இந்து இளைஞர் மன்றமும் கூட்டாக நடவடிக்கை எடுத்து வருகின்றன. சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் மதிப்பீடு செய்யப்பட்ட இக்கேணி அமைப்பதற்கான நிதியை பொது மக்களிடமும், தர்ம ஸ்தாபனங்களிடமும் இருந்து பெறுவதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

திருமதி. ஏ. கிருபைராஜா (கொழும்பு) என். கந்தசாமி (தலாத்துஓயா) திருமதி. எஸ். சந்திரசேகரி (கந்தகெதர) திருமதி. கே. நற்குணம் (புத்தளம்) செல்வி. எஸ். வலலிபுரநாதன் (தலவக்கெல) ஏ. நந்தபாலன் (முருங்கன்) திருமதி. எஸ். சோமசுந்தரம் (திருக்கோணமலை) பீ முத்துக்குமாரசாமி (கொழும்பு) திருமதி. ஜே. குகராசா (கொழும்பு) திருமதி ஆர். ஜி சுகந்தநாதன் (மாத்தளை) ரீ. விக்கினேஸ்வரராஜா (நுவரெலியா) செல்வி. யே அரியகுட்டி (தலாத்துஓயா) திருமதி. எல. சிவபாதம் (கிளிநொச்சி) திருமதி, எஸ் பயிரவநாதன் (நீர்கொழும்பு)

திருமதி. ஜே. ஏ. மரியநாயகம் (ராமலிங்கக்குளம்) எஸ. எம. செல்வராசா (தம்பலுவில்) ஏ. ஜெயபாலரட்ணம் (பூநகரி) கே. ஓ லட்சுமணன் (கலகுவன) திரு தி. ஜே. அம்பலவாணர் (வவுனியா) திருமதி வள்ளியம்மை கதிர்ப்பு (அக்கரப்பத்தனை)

எஸ். தர்மகுலேந்திரன் (தலவாக்கலை) பொன். சிறுவாமதேவன் (வவுனியா) செல்வி ஆர். கனகசபாபதி (வவுனியா) திருமதி எம். சிவபாதம் (ஓமந்தை) ரீ. பாலசிங்கம் (அக்கரப்பத்தனை) திருமதி ஐ லட்சுமணன் (கலகெலன) திருமதி. ஐ. செல்வராஜா (வத்தளை) திருமதி எஸ். பூபாலநந்தன் (அடம்பன்) கே குமாரசந்திரம் (முள்ளியவளை) எம். விமலானந்தன் (கொழும்பு) கே. கனகரட்ணம் (அனடஸ) ஏ. கனகரட்ணம் (முல்லைத்தீவு) கே. செல்வகுமாரன் (களுதாவளை) சு. எஸ் கந்தசாமி (வவுனியா) ஐ. சண்முகநாதன் (முல்லைத்தீவு) திருமதி மாலினி விவதானந்தன் (யோகபுரம்) திருமதி பீ. பரராஜசிங்கம் (முல்லைத்தீவு) செல்வி கே. சேனுதுபாசா (பதுளை) ஈ. குணசிங்கம் (கிளிநொச்சி)

(முற்றும்)

## பிறந்தநாள் வாழ்த்து

✱ சுன்னாகம் கந்தரோடை அருளானந்தராசா சந்திரவதனா தம்பதிகளின் மகன் லோகிதன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ பலாலி கிழக்கு ஞானசேகரம் யோகராணி தம்பதிகளின் மகன் சுலக்ஸன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ பருத்தித்துறை தியாகராசா சிவகாமசுந்தரி தம்பதிகளின் மகள் குமாரி பாமா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## 80வது ஆண்டு விழா

(கிளிநொச்சி)

சர்வதேச ரோட்டறிக் கழகத்தின் எண்பதாவது ஆண்டு நிறைவையொட்டி உலக சமாதான தின வைபவம் கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் கிளிநொச்சி-பரந்தன் ரோட்டறிக் கழக சர்வதேச இயக்குநர் திரு மா வரராஜசிங்கம் தலைமையில் நிகழ்ந்தது. நவஜீவனம், அருட்செல்வி எலிசபெத் பேக்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினர். தலைவர் திரு. ப. வை. ஜெயபாலனும் உலக சமாதானம் பற்றி உரையாற்றினர்.

## ஒரு போத்தல் மண்எண்ணெய் பதினைந்து ரூபா

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 15 ரூபா வரை விற்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பெரும் அவதியுறுகிறார்கள். எரிபொருள்கள் போதியளவு இங்கு வந்து சேராமையே தட்டுப்பாட்டுக்குக் காரணமாகும்.

## ஆங்கில ஆசிரியர் இல்லாத குறை நீங்குமா?

(மிருசுவில்)

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தற்போது ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. குறிப்பாக ஆங்கிலம் போதிக்கக் கூடிய ஆசிரியர் ஒருவரையாகிலும் அவசியம் தந்துதவும்படி மேற்படி பாடசாலை அதிபர் திருமதி புஷ்பராணி யோசேப் இலாகா அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## விலை வீழ்ச்சி

(ஏழாலை)

விவசாய நிலங்களில் அறுவடைக் காலம் அண்மியதனை அடுத்து அரிசி விலை பல இடங்களில் குறைந்துள்ளது.

சுன்னாகத்தில் ஒரு கிலோ 13 ரூபாவாக விற்ற அரிசி 7 ரூபாவுக்கு இறங்கி விட்டது இன்னும் அரிசியின் விலை குறையலாம் என வர்த்தக வட்டாரம் எதிர்பார்க்கிறது. இவ்வாறே வெங்காயம், உருளைக்கிழங்கு என்பவற்றின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

## விறகின் விலை உயர, உயர

# மக்கள் கவனம் பாளை மட்டை சிரட்டைப் பக்கம் திருப்பம்

(இருபாலை)

வெளியூர்களில் இருந்து விறகுகள் வராத படியால் உள்ளூர் வியாபாரிகளும் மர ஆலைக்காரர்களும் விறகின் விலையை அதிகரித்துள்ளனர். கொத்திய விறகு தூக்கு எண்பது ரூபாவாகவும் கொத்தாத விறகு ஒரு தூக்கு அறுபது ரூபாவாகவும் இப்பகுதிகளில் விற்கப்படுகிறது.

இதனால் பொது மக்கள் தூக்கு விறகின் நாட்டத்தை குறைத்து உள்ளூரிலேயே தென்னமட்டை, தென்னம்பாளை, தேங்காய் மட்டை, தேங்காய்ச் சிரட்டை, ஆகியவற்றில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

## ஏழாலை விழாவில் பேச்சு:

# சமயமும் வாழ்வும் ஒன்றே; இந்நிலையை உணர்தல் நலம்

(ஏழாலை)

"தாய்மார் பிள்ளைகளைப் படிக்கிற பிள்ளைகளாக வளர்த்தல் வேண்டும். தமிழிலும் சைவத்திலும் பேரன்புள்ள பிள்ளைகளாக வளர்த்தல்வேண்டும். உலகம் முழுவதும் ஒப்பக்கூடிய பெருந் தத்துவங்களை சைவ இலக்கியங்கள் போதிக்கின்றன. கந்தபுராணமும், பெரியபுராணமும் சைவத்தையும் தமிழினையும் வளம்படுத்துகின்றன, சமயம் வாழ்க்கையிலிருந்து பிரித்துப் பார்க்கக் கூடியதன்று. வாழ்க்கையே சமயமாக இருத்தல் வேண்டும்."

இவ்வாறு ஏழாலை வடக்கு ஆலங்கட்டைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் உரை நிகழ்த்திய ஏழாலை சைவமகாஜன வித்தியாலய அதிபர் திரு. வீ. த. திருநாவுக்கரசு குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. எஸ். நடராசா தலைமையில் சொற்பொழிவுகள் நடைபெற்றன,

திரு. திருநாவுக்கரசு மேலும் பேசுகையில 'நீதி வழங்குதலில் மனுநீதிகண்ட சோழனையும், நேர்மையற்ற அரசியல் வாழ்க்கைக்கு அமரரான அன்னை இந்திரா காந்தியையும், மன்னித்துப் பேரருள் சுரப்பதற்கு முருகப் பெருமானையும் நம் எண்ணிப்பார்த்தல் வேண்டும். பகையை வென்று துன்பத்தை களைவது மட்டுமல்ல, பகைவனையும் புனிதமாக்கிப் பேற்றச் செய்வதே பெருங் கருணை என்பதனை 'சேவலும் மயிலும் போற்றி' என்பதன் மூலம் கந்தபுராணம் சுட்டிக் காட்டுகின்றது' என்றார்.

திரு. சி. சக்திகிரீவன் 'சிவராத்திரி மகிமை' பற்றிப் பேசுகையில் 'சகல பூசை வழிபாடுகளும் சிவனுக்கே சொந்தம், சகல விரதங்களும், அவனையே கருப்பொருளாகக் கொண்டன. சிவனே எத்தெய்வத்தின் வடிவிலும் நிற்கிறான், அவனை வழிபடுவது மூலம் சிவகோடிகள் அழியாப் பேரின்பப் பெருவாழ்வை யடைகின்றன' என்றார்.

சிவஸ்ரீ சிவ. மகாலிங்கம் விசேட இசைப் பிரசங்கம் நிகழ்த்தினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் திருமுறைப் பாடல்களும் வில்லுப் பாட்டு முதலியனவும் இடம் பெற்றன.

உங்கள் காசோலைகளை பணமாக மாற்ற...

உங்கள் அன்றாட வாழ்க்கையில் காசோலைகளைப் பணமாக்கலும் பாதுகாப்பாகப் பேணுதலும் தவிர்க்க முடியாத தேவைகளாகும்! சீரற்ற சேவைகளால் அவதிப்படும் உங்கள் உதவிக்கு தமிழர் நிதியம் நாணய முறித்திட்டத்தினை இன்றே நாடுங்கள்!

நாணய முறித் திட்டம்

உங்கள் பணம் அல்லது அரசாங்க, கூட்டுத்தாபன, ஓய்வூதியக் காசோலைகளைச் செலுத்தி பணத்திற்கு ஈடான நாணய முறிகளாக மாற்றிக் கொள்ளுங்கள்!

உங்கள் உடனடிப் பணத் தேவைக்கு

தமிழர் நிதியத்திலேயே இந்நாணய முறிகளை உடனடியாகவோ பின்னரோ பணமாக்கலாம் அல்லது வேறு எவருடனுமோ பரிவர்த்தனை செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☏ 22437

**உதய சிந்தனை**

கருமத்தில் பற்றுள்ள பாமரர் எவ்வாறு செய்கின்றனரோ அவ்வாறே ஞானியும் உலகை நல்வழிப்படுத்துவதை விரும்பிப் பற்றில்லாமல் கருமம் செய்தல் வேண்டும். - பகவத் கீதை.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

## இதய ஒலி

7-3-85 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி மாசி 24)

# நடக்கக் கூடாதது நடந்து விட்டது!

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சம்பவம் சைவ சமயத்தவர்களை மட்டுமன்றி, தமிழ்மக்கள் அனைவரையுமே பெரும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

இந்த அதிர்ச்சியிலிருந்து பக்தர்கள் இன்னமும் விடுபடாத நிலையில் இருக்கிறார்கள்.

மிகவும் குறுகிய காலத்தில் நேரம் தவறாத பூஜை, சிறப்பான நிர்வாகம். அந்தணர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு போன்றவைகளால் இவ்வாலயம் இலங்கையில் மட்டுமன்றி, இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் பெயர் பெற்றுத் துலங்கியது.

துர்க்கையின் கோபுரதரிசனம் பெற்று, துன்பம் நீங்கிய பக்தர்கள் பல்லாயிரம்பேர்.

இவ்வாறு புகழ்பெற்ற துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பயங்கரக் கொள்ளையால் மக்கள் மனம் நொந்து போயுள்ளனர்.

கொள்ளை ஒரு புறமிருக்க, ஆலயத்தில் தங்கியிருந்த தொண்டர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆலய நிர்வாகசபைத் தலைவி துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டு அவர் அணிந்திருந்த நகைகளும் பலாத்காரமாக இழுத்து, அறுக்கப்பட்டுள்ளன.

பல அறைகள் உடைத்துச் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன. விக்கிரகங்கள் அசைத்துப் பார்க்கப்பட்டுள்ளன.

கேட்கக்கூடாத கேள்விகளையெல்லாம் வந்தவர்கள் கேட்டார்களாம்!

சம்பவத்தைக் கேள்வியுற்ற பல்லாயிரம் பக்தர்கள் ஆலயத்தில் திரண்டு நின்று, அன்னை துர்க்கையிடம் அழுது மன்றாடி நடந்ததற்கான தீர்ப்பை வழங்கும் பொறுப்பையும் அவளிடமே விட்டுள்ளனர்.

துர்க்கை அம்மன் ஆலயம் வெறுமனே ஒரு வழிபாட்டுத் தலமாக மட்டும் இருக்கவில்லை என்பதை நாம் மறந்துவிட முடியாது.

வெறுமனே சமயப்பணியுடன், உண்டியலை நிரம்புவதை மட்டும் இந்த ஆலய நிர்வாகிகள் கவனித்து வரவில்லை.

தமிழ்ப்பணி; சமூகப்பணி, கல்விப்பணி ஆகியவைகளிலும் துர்க்கை அம்மன் ஆலயம் தன்னை ஈடுபடுத்தி, இணைத்து வந்துள்ளது.

ஆலயத்துடன் அமைந்துள்ள கலியாண மண்டபத்தை சமயப்பணி என்று சொல்ல முடியுமா?

அனாதைச் சிறார்களுக்கு உண்டியும், உறையுளும் கொடுத்து ஆதரவளித்து வருவதை சமயப்பணி என்று சொல்ல முடியுமா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த பீடம் அமைத்து, சைவ சித்தாந்தக் களஞ்சியம் உருவாக்க ஐம்பதாயிரம் ரூபா வழங்கியதை சமயப்பணி என்று சொல்ல முடியுமா?

ஆடிக்கலவரத்தில் அடி வேண்டிவந்த அகதிகளுக்கு ஆலயக் காணியில் வீடமைத்து அன்பளிப்பாக வழங்கியமையை சமயப் பணியென்று கூறமுடியுமா?

இவைகள் இதுவரை நடந்து முடிந்த சில நல்ல முயற்சிகள் இவைகளிலும் உயர்ந்த இன்னும் எத்தனை எத்தனையோ திட்டங்களைச் செயற்படுத்த ஆலய நிர்வாகிகள், தொண்டர்கள், பக்தர்கள் எண்ணியிருந்த வேளையில், அனைவரையும் கதிகலங்க வைக்கும் நள்ளிரவுக் கொள்ளை நடைபெற்றுள்ளது,

அங்கும் இங்குமாக நடைபெற்ற கொள்ளைச் செயல்கள் கல்விக்கூடங்களில் இடம்பெற்றபோது முழுச் சமூகமுமே இதனை எதிர்க்க ஆரம்பித்தது

ஆனால் இப்போது தெய்வசந்நிதானத்தில் கைவைக்கப்பட்டுள்ளது.

அன்றாடம் நாம் படும் இன்னல்களையும், தொல்லைகளையும் ஆண்டவனிடம் சொல்லி அழுகின்றோம். ஆறுதல் வேண்டி அந்தச் சந்நிதானத்துக்குச் சென்று ஆறுதல் பெறுகின்றோம்.

அந்த சந்நிதானமே இப்போது கொள்ளையரின் கைவரிசைக்கு இலக்காகி விட்டது. அன்னை துர்க்கையை "மூளி அலங்காரி"யாக்கி விட்டதாக சம்பந்தப்பட்டவர்கள் மகிழ்ந்திருக்கலாம்.

ஆனால், பல்லாயிரம் பக்தர்களின் ரத்தக் கண்ணீருக்கு "தெய்வம் நின்று பதில் சொல்லும்."

நடக்கக் கூடாதது நடந்து விடடது.

இதுவே இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் அமையலாம்.

---

### புதிய பாராளுமன்றம் 23ம் திகதி கூடுகிறது

# ஜனதிபதி ஆட்சிமுறைத்திட்டம் பாகிஸ்தானில் அமுலுக்கு வருகிறது

(இஸ்லாமாபாத்)

மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் தேர்தலின் பின் ஜனாதிபதி ஷியாவுல்-ஹக் புதிய சட்ட திட்டங்களை உருவாக்கி அதன் வெளிப்பாடுகளை உத்தியோக பூர்வமாக இம்மாதம் இருபத்து மூன்றாம் திகதி பாராளுமன்றம் கூடும்போது தெரிவிக்கவுள்ளார் 1973 வருடத்தின் பாராளுமன்ற அரசியலமைப்பு ஜனாதிபதி ஆட்சிமுறை அரசியலமைப்பாக மாற்றப்படும் என்றும் இராணுவச் சட்டமுறை படிப்படியாக தளர்த்தப்படும் என்றும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தேசிய சபைக்குத் திருத்தங்களைநிராகரிக்கும் அதிகாரம் உண்டு. என்றாலும் மூன்றில் இரண்டு வீத உறுப்பினர்களின் ஆதரவும் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் மாகாண சபைகளின் ஆதரவும் இருந்தால் மட்டுமே திருத்தங்களை நிராகரிக்க இயலும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்குப் பிரதம மந்திரியை நியமிக்கவும் மந்திரி சபை நிறுவவும் ஆயுதப் படைகளின் உயரதிகாரிகளை நியமிக்கவும் மாகாண சபைகளின் முதல்வர்களை நியமிக்கவும் பாராளுமன்றத்தைக் கலைக்கவும் அதிகாரம் இருக்கிறது.

## புலியின் ஆவேசம்

(தர்மபுரி)

தர்மபுரி மாவட்டத்தில் எட்டரை அடி நீளமான புலி ஒன்று ஆவேசம் கொண்டதில் பொலிஸ்காரர் ஒருவரும் காயமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பங்களாதேஷ் அரசு கல்வி நிலையங்களை மூடிவிடபணிப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் சகல கல்வி நிலையங்களும் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. மாணவர் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் இராணுவச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதானோர் தொகை நூற்று ஐம்பத்து ஆறு என்று தெரிவிக்கப்படுகிறது. கைதானோரின் பெயர் விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. குழப்ப நிலையைத் தவிர்க்கவே இந்நடவடிக்கை என்று அரசு தெரிவித்துள்ளது

பொறியியல், மருத்துவக்கல்லூரிகளும் மூடப்பட்டவற்றில் அடங்கும்.

## இவர்கள் அதிகம்

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரி தேர்தலில் பெண்களும், இளைஞர்களும் அதிகளவில் வாக்களித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## அகதிகளின் வருகை சற்றே குறைகிறது: காரணம்....

(ராமேஸ்வரம்)

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு வரும் அகதிகளின் தொகை சில நாட்களாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்துக்குத் தப்பியோடி வருகையில் இலங்கை இராணுவத்தால் இவர்கள் வரும் படகுகள் கைப்பற்றப்படுகின்றன அல்லது இவர்கள் படகுகளுடன் இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்படுவதே இதற்குக் காரணம் என ராமேஸ்வரம் வந்து சேர்ந்த அகதிகள் மூலம் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை அறுபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த முந்நூற்று எட்டுப்பேர் ராமேஸ்வரம் வந்துள்ளனர் என்றும் சென்ற மாதம் ஐந்தாம் திகதியிலிருந்து இங்கு வந்து சேர்ந்த இலங்கை அகதிகளின் மொத்த எண்ணிக்கை பதினான்காயிரத்து நானூற்று அறுபது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## ஆராய்வு

(புதுடில்லி)

பாரதமும், சுவீடனும் வர்த்தக ரீதியில் சாத்தியமாகக் கூடிய விடயங்களை ஆராய்ந்து வருகின்றன. இந்த வகையில் சுவீடன் நாட்டு மந்திரி ஒருவர் புதுடில்லி விஜயம் புரிந்துள்ளார்.

## பூட்டோ போன்று நானும் நிரபராதியே- மரணதண்டனைக்குமுன் நிஸார்பலூச் கூறினார்

(கராச்சி)

பாகிஸ்தான் ஆட்சியினரால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட நிஸார்பலூச் குறித்து மேலும் விவரங்கள் வெளிவந்துள்ளன

தடைசெய்யப்பட்ட மக்கள் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான இவருக்கு கராச்சி மத்திய சிறையில் வைத்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

மரணதண்டனை நிறைவேற்றப்படுமுன் இவரைச் சந்தித்த உறவினர்களிடம் தானும் மாஜி ஜனாதிபதி சுல்பிகார் அலி பூட்டோ போன்று நிரபராதியே என்று கூறியுள்ளார்.

பூட்டோ பாகிஸ்தான் அரசினால் தூக்கிலிடப் பட்டது தெரிந்ததே 1981ம் வருடம் ஓர் பாகிஸ்தான் விமானத்தைத் திசை திருப்புவதற்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பலூச் என்பவருக்கு நேற்று முன்தினம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

### 102 வயதிலும்

## ஜனநாயகத்தில் நம்பிக்கை

(பாண்டிச்சேரி)

ஜனநாயக ரீதியிலான ஆட்சியமைபில் தனக்குள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் 102 வயதுடைய முதியவர் ஒருவரும் நேற்று முன்தினம் நடைபெற்ற பாண்டிச்சேரி தேர்தலில் வாக்களிக்க வந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சில அந்தகர்கள் கூட தட்டுத் தடுமாறி வந்து வாக்களிப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

## மீண்டும் செயற்பாடு

(மதுரை)

இலங்கையில் தமிழர் கொடுமைக்கு உள்ளாவதைக் கண்டித்து மாணவர்கள் தொடர்சியாக ஆர்ப்பாட்டம் நடத்தியதால் மூடப்பட்ட மதுரைக் கல்லூரிகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன.

வீதிப் போக்கு குவரத்தைத் தடுக்கும் வகையில் கூட இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

### பாகிஸ்தான் ஜனதிபதி கருத்து

## பாரதத்துடனான நல்லுறவு எதிர்காலத்தில் வளரும்நிலை

(இஸ்லாமாபாத்)

எதிர்வரும் வருடங்களில் பாரதத்துடனான பாகிஸ்தான் உறவுகள் வளர வழிபிறக்கும் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாவுல்-ஹக் தெரிவித்திருக்கிறார்.

பரஸ்பர நல்லெண்ணத்தின் மூலம் இருதரப்பு நல்லுறவு வலுப்படல் சாத்தியமே என்ற கருத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

## கூட்டுக்கூட்டம்

(சென்னை)

தமிழ்நாடு சட்டசபை மேலவையின் கூட்டுக்கூட்டத்தொடர் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

## திருப்பத்தூரில் 60வீதவாக்களிப்பு

(திருப்பத்தூர்)

வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் இடைத்தேர்தல் அறுபது சதவிகிதத்தினர் வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### வர்த்தகரீதியிலான நடவடிக்கை

## தூத்துக்குடி-மாலைதீவு புதிய கப்பல் சேவை நடைபெறும்

(புதுடில்லி)

தூத்துக்குடிக்கும், மாலைதீவுக்கும் இடையே இம்மாதம் பத்தாம் திகதிமுதல் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வர்த்தக ரீதியிலான இச்சேவை மாதத்தில் இருதடவைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் வலுப்பட இக்கப்பல் சேவை வழிவகுக்கும் என்றும் புதுடில்லி வட்டாரங்கள் கூறின.

ஈழமுரசு

### 15ம் திகதி முதல் அமுலாகும்

# 49 வெளிமாவட்ட ஆசிரியர் கிளிநொச்சிக்கு இடமாற்றம்

வெளிமாவட்டங்களில் கடமையாற்றிய 49 ஆசிரியர்களுக்கு இம் மாதம் 15ம் திகதி முதல் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றம் கிடைத்துள்ளது.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு;- செல்வி ஜி கனகலிங்கம் (அக்கரப்பத்தன) திரு. கே. எஸ். கே, நவரத்தினம் (வவுனியா) திருமதி எம். குமாரசாமி (நெடுந்தீவு) திருமதி என் பரஞ்சோதி (ஹலிஎல) செல்வி பீ. முனியாண்டி (மாத்தளை) திரு. ரீ தம்பிஐயா (முருங்கன்) செல்வி ஏ கந்தையா (முருங்கன்) திரு தி பீ கிருஷ்ணதாசன் (பேசாலை) திரு. ஏ. கனகரத்தினம் (பசறை) திருமதி சி. கனகரத்தினம் (பசறை) திரு. எஸ். கிருஷ்ணநாதன் (அப்புத்தளை) திருமதி ஆர். உருத்திரா (பூணகல) திருமதி பி. இராமநாதன் (முல்லைத்தீவு) திரு எஸ். சிவநாதன் (படுகல) திருமதி கே ஜே. வெள்ளையா (கண்டி) திரு. எம். துரைராசா (பதுளை) திரு ஏ நடராசா (கிதுல்கல) திரு எம். சண்முகராசா (பன்வில) திரு. எஸ் சிவசம்பு (மாங்குளம்) திரு ஆர். வாமசிவம் (வவுனியா) திரு. என். சுந்தரநடராசா (புத்தளம்) செல்வி. ஐ. நாகரத்தினம் (பண்டாரவளை) திருமதி. கே. சிவானந்தராசா (வத்தளை) திரு ரீ செல்லையா (கொழும்பு) திரு. வீ ஏ சிவானந்தன் (பொலநறுவ) திரு எஸ். இராசரத்தினம் (பூனகல) திருமதி. கே.பி. சுந்தரம் (எட்டியன் தோட்டை) திரு. எஸ். எ பி. யேசுதாசன் (அக்கரப்பத்தன) திரு எ கனகரத்தினம் (பசறை) திருமதி எஸ் கனகரத்தினம் (பசறை) திரு .எ. சோமசுந்தரமூர்த்தி (மன்னார்) திரு. வி சிவசுந்தரம் (பண்டாரவளை) திரு பி. சுவாமிநாதன் (கலவெல) திரு எ. கனகசபை (கந்தளாய்) திரு. என் வி. இதயகுமாரன் (கோகிலகெதற) திரு எஸ். ஈஸ்வரமூர்த்தி (நீர்கொழும்பு) திரு. எஸ் தியாகராசா (கலகா) திரு. பி. சிறிவிக்கினேஸ்வரன் (அநுராதபுரம்) செல்வி. உ. சிவஞானம் (வெலிமட) திருமதி வி. யோகேந்திரன் (விசுவமடு) செல்வி கே. சந்திராபிள்ளை (மினுவாங்கொட) திருமதி. ரி. சத்தியதாசன் (செட்டிகுளம்) திரு. வி சிவலிங்கம் (வவுனியா) திரு. எஸ் பத்மநாதன் (வவுனியா) திரு. எ. முத்தையா (பண்டாரகம) திருமதி. புஷ்பராணி சாமுவேல் (முல்லைத்தீவு) திரு. ரி. பரமநாதன் (வவுனியா) செல்வி. எஸ் சுப்பிரமணியம் (இரப்பொட) திரு. கே சந்திரசேகரம் (கந்தப்பளை)

## ஒரு மாதமாகியும் தகவலில்லை

(இருபாலை)

பிரபல சட்டத்தரணியும், பதில் நீதவானுமான திரு. எஸ் அமிர்தலிங்கம் அவரது இல்லத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டு இன்றுடன் ஒரு மாதமாகின்றபோதிலும் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை வெளியிடப்படவில்லை. மர்மமான வகையில் நடைபெற்றுள்ள இக் கடத்தல் பற்றிப் பல்வேறுவிதமான வதந்திகள் கடந்த ஒரு மாதமாக அடிபட்டபோதிலும், கடத்தியவர்கள் எவரும் இதுவரை எந்த அறிவித்தலும் விடாதது குறிப்பிடத்தக்கது.

## சிறில் மத்தியு நடவடிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தம்மைத் தற்காலிகமாக நீக்கியதை ஆட்சேபத்து களனி தொகுதி எம் பி. திரு. சிறில் மத்தியு சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

### அகதிகளுக்கு,.,,

—1-ஆம் பக்கத் தொடர்

ஹெக்டர் பாப்பில் அமையவுள்ளதாகத் தெரிவித்த அவர், மதுரை மாவட்டத்திற்கு ஏற்கனவே அகதிகளாக வந்துள்ள இருநூறு குடும்பங்கள் இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இங்குள்ள திருவாதவூர் என்ற இடத்திலும் அதன் அயற் பகுதியிலும் இவ் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

## உணவு முத்திரை இருமடங்காக அதிகரிக்கும்

(கொழும்பு)

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் உணவு முத்திரையின் பெறுமதியை இரண்டு மடங்காக அரசாங்கம் அதிகரிக்கவுள்ளது.

தற்போது முன்நூறு ரூபாவுக்குக் குறைந்த வருமானத்தை உள்ள குடும்பங்களுக்கே உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன. இந்த எல்லையை எழுநூறுவரை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

### மாவட்ட சபை..

—1-ஆம் பக்கத் தொடர்

நேற்று தீர்மானிக்கப்பட்டது.

இத்தேர்தல் ஒத்திவைக்கப்படுமென்று ஈழமுரசு இம் மாதம் 2ம் திகதியே செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட சபைகள் கடந்த இரு வருடங்களாக இயங்காதிருப்பது தெரிந்ததே.

### தொழிலில்லாத,,,

—1-ஆ பக்கத் தொடர்

அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

முன்னர் தொழில் வங்கியில் பதிவு செய்த பலர் வெளிநாடுகள் சென்றதாலும். வேறு வேலைகளைப் பெற்றுவிட்டதாலும் அவர்களில் யார் யார் இன்னமும் தொழிலின்றி இருக்கிறார்கள் என்பதைப்பற்றிய விபரங்களைப் பெறுவதற்காக அவர்களையும் மீண்டும் விண்ணப்பிக்கச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களை அடுத்த வாரத்திலிருந்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

### இந்தியா முழுவதும்,,,

—1-ஆம் பக்கத் தொடர்

சுயேட்சை அபேட்சகரான முன்னாள் முதலமைச்சர் அந்துலே வெற்றி பெற்றுள்ளார். மொத்தம் 9 மாநில முதலமைச்சர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

கர்நாடகத்தை ஜனதாவும் ஆந்திராவை தெலுங்கு தேசக் கட்சியும் கைப்பற்றியுள்ளன.


## கோவில் நகைகளை உடனடியாக திருப்பி ஒப்படையுங்கள்!

கோவில் நகைகளையும், சொத்துக்களையும் அபகரித்தவர்கள் யாராக இருந்தாலும் அவைகளை உடனடியாகத் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று தமிழர் விடுதலைப் பாதுகாப்புப் பேரணி விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளது. இந்த வேண்டுகோளின் விபரம் வருமாறு;-

கோவில் நகைகளையும், சொத்துக்களையும் ஆயுத முனையில் அபகரிக்கும் கூட்டத்தினர் யார்? எமது விடுதலைப் பாதையில் இந்த விபரீதத்தை எந்த விடுதலை இயக்கமும் அனுமதிக்கக் கூடாது. எமது ஆலயங்களில் உள்ள நகைகளைக் கொள்ளையடிப்பதனால் தமிழினத்தின் நாகரீகத்தையும், கலாசாரத்தையும் அழித்தொழிப்பதற்கு மற்றவர்களுக்கு நாம் ஏற்படுத்திக் கொடுக்கும் ஓர் சந்தர்ப்பமாகும். எமது போராட்டப் பாதையில் கோவில் நகைகளையும் தனியார் சொத்துக்களையும் ஆயுத முனையில் கொள்ளையடிப்பதால் எமது விடுதலைப் போராட்டம் எமது மக்களிடையே பாரிய எதிர்ப்பையும் வெறுப்பையுமே சம்பாதித்துக் கொள்ள முடியுமே தவிர ஆதரவையோ ஒத்துழைப்பையோ பெறமுடியாது என்பதையும் விடுதலைப் போராளிகளாகிய நாம் அனைவரும் உணர வேண்டியது அவசியமான தொன்றாகும்.


### உலகக் கோப்பைக்கான கிரிக்கட்

## இந்தியாவுடன் பாகிஸ்தான் இறுதிப்போட்டியில் மோதும்

(சிட்னி)

மேற்கு இந்தியக் குழுவை ஏழு விக்கெட்டுகளால் தோற்கடித்ததன் மூலம் உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்கான தகைமையை, பாகிஸ்தான் நேற்றுப் பெற்றுக் கொண்டது.

நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்தியக் கோஷ்டி 44 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் 46 ஓவர்களில் மூன்று விக்கட்டுகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி இந்திய கோஷ்டியை எதிர்த்து விளையாடும்.

### பாண்டிச்சேரியில்..

—1ம் பக்கத் தொடர்

காசுக்கடை- திரு. பீ. கண்ணன் (இ. காங்) ராஜ்பவன்- ஜோசப மரியம்பிள்ளை (இ காங்) புஸ்கிம- ரீ எம். அஷ்ரத் (இ. காங்) உப்பளம்- பீ. கே. லோகநாதன் (அ. தி. மு. க) உருளையம்- டாக்டர் சுப்பிரமணியம் (அ. தி, மு. க.) அரியாம்குப்பம்- பி. புருஷோத்தமன் (அ. தி. மு. க.) எட்டப்பாக்கம்- வீ, வைத்திலிங்கம் (இந் காங்.) குருகிநாட்டம்- ஆர். ராமநாதன (தி. மு. க.) இருபோளை- திருமதி எஸ். பூபளர (தி மு. க.) உசுடோ- ராமரட்ணம் (இ. காங்.) வெல்லியனூர்- ஆர். சுப்பராயக்கவுண்டா (இ. காங்.) உழவர்கரை- ஆர். சோமசுந்தரம் (அ. தி. மு. க.) அடடஞ்சாவடி- ஜீ. ரெட்ணகுமார் (ஜனதா) போததுச்சேரி- வீ. வெங்கடாசலம் (இ. காங்.) முதலியாற்றுப்பேட்டை- பெருமாள் ராஜு (தி மு. க,) மத்தியா பாளையம்- வீ. பாலாஜி (இந். காங்.) காரைக்கால்- கோதண்டராமன் (இ. காங்.) மாசேர்டீ. கே சததிநாதன் (இ. காங்) முசராம்- பரசுராம் (இ. காங்) நெல்லித்தோட்டம்- வீ ஜானகிராம் (தி. மு. க) முதலியார் தெரு- சபாபதி கோதண்டராமன் (இ, காங்.) பந்தூர்- ஏ. வீ. சிறீதரன் (இ. காங்) நான்சில்- எச். அபுல் மரைக்காயர் (இ. காங்.) மல்ல டிர்) ரீ. இராமச்சந்திரன் (தி. மு. க.) காரைக்கால் தெற்கு- எஸ் இராமசாமி (சுயேச்சை) பாகூல்- ரீ. முத்துவேலு (ஜனதா) இறவி- வீ. எம். கே. வரதப்பிள்ளை (அ. தி. மு க-)

### வடமராட்சியில்,,

ஞர்களின் பலமுகாம்கள் கண்டு பிடிக்கப்பட்டு, அங்கிருந்த ஆயுதங்கள், வெடிமருந்துகள் மீட்கப்பட்டதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

### ராமராவ்..

—1-ஆம் பக்கத் தொடர்

மூன்று தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 'தொண்டாவின்'..

—1-ஆம் பக்கத் தொடர்

வித்த அமைச்சர் அல்விஸ், தற்போது இந்தியா சென்றிருக்கும் அமைச்சர் தொண்டமான் எங்கெங்கு செல்வார், யார் யாரைச் சந்திப்பார் என்று அரசாங்கத்திற்கு எதுவும் தெரியாது என்றும் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, அமைச்சர் தொண்டமான் இவ்வாரத்தில் தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்திப்பார் என்றும், அடுத்த வாரம் புதுடில்லி சென்று முக்கிய தலைவர்களைச் சந்திக்கக் கூடுமென்றும் சென்னையிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளது.

### பளையில் கொள்ளை.,,

—1-ஆம் பக்கத் தொடர்

பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. முப்பத்தெட்டு தார்ப பீப்பாக்கள், தொண்ணூறு சீமெந்து பாக்கற்றுகள், இரண்டு நீரிறைக்கும் மெசின்கள், தார் கொதிக்க வைக்கும் சாதனம், ட்ரோலர் என்பனவே களவாடப்பட்டவையாம்.


## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தாழ்மையான வேண்டுகோள்

எமது சங்கத்தினால் ரூபா 5, 50 000/- செலவு செய்து கொள்வனவு செய்த புதிய இசுசு லொறி இல 40ஸ்ரீ 5071ஐ 5 2 85ல் இனந்தெரியாதவர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள். சங்கம் புதிதாகக் கொள்வனவு செய்த இந்த லொறியினால் இதுவரை எதுவித உழைப்பும் உழைக்காத நிலையில் லொறி கடத்தப்பட்டு விட்டது. ரூபா 5, 50,000/- வங்கிக் கடனில் கொள்வனவு செய்த லொறிக் கடனைச் செலுத்தும் போது, லொறியில்லாத நிலையில் சங்கத்துக்குப் பாரிய நிதியிழப்பு ஏற்படுகிறது.

மேலும், எமது மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மக்களுக்கு நாம் தொடர்ந்தும் சேவை செய்ய எமது லொறியைக் கடத்திச் சென்றவர்கள் பொது மக்களின் நன்மை கருதி திரும்ப ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்படி லொறி எங்காவது அநாதரவான நிலையில் நிற்பதைக் காணும் பொது மக்கள் எமக்கு அறிவிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

01 03 85 — சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்



## ஓராண்டு நினைவஞ்சலி

கந்தசாமி சிறிஸ்கந்தராசா



தோற்றம் : 1954 7 10
மறைவு : 1984.3 4

எதிர்பாராப் படுகொலைக்கு நீர் பலியாகி அகால மரணமடைந்தீர். உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

பெற்றோர், சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள், அன்றிமார்கள் மழலைகள்: சஜன். மயூர
109/2, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


''ஈழ முரசு'' சயிபாபா அட வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37. கண்டி வீதி. யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 07-03-1985 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி. 23336